**கடன் தொகையை காலத்திற்கு உட்பட்டு செலுத்தாதபோது விதிக்கப்படும் கூடுதல் வட்டி (Penal Interest):**

- நீங்கள் கடன் தவணையை காலத்திற்கு உட்பட்டு செலுத்தினால், வங்கி எந்த கூடுதல் வட்டியும் **(Penal Interest)** விதிக்காது.
- ஆனால், நீங்கள் கடன் தவணையை அல்லது அதன் ஒரு பகுதியை காலத்திற்கு உட்பட்டு செலுத்தாதபட்சத்தில், நிலுவையில் உள்ள தொகைக்கு, அது செலுத்தப்பட வேண்டிய நாளிலிருந்து நீங்கள் செலுத்தும் நாள்வரை, ஆண்டுக்கு **2%** கூடுதல் வட்டி **(Penal Interest)** வங்கி விதிக்கும்.
- காலத்திற்கு உட்பட்டு செலுத்தாததால் விதிக்கப்படும் இந்த கூடுதல் வட்டி **(Penal Interest)** கீழ்க்கண்ட முறையில் கணக்கிடப்படும்.

  **கூடுதல் வட்டி (Penal Interest) =**
  நிலுவையில் உள்ள கடன் தொகை × **(**கடன் தவணை செலுத்த வேண்டிய நாளிலிருந்து செலுத்தும் நாள் வரை உள்ள நாட்களின் எண்ணிக்கை × **2%) ÷ 365**

- வங்கியின் அனைத்து கடன் திட்டங்களுக்கும், காலத்திற்கு உட்பட்டு கடன் தொகையை செலுத்தாதபட்சத்தில், இந்த கூடுதல் வட்டி **(Penal Interest)** விதிப்பு பொருந்தும்.